

அமரர் செ. சிவபாக்கியம் J.P (வேங்கை)

ஞாபகார்த்த வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழி மறைக்காதீர்

## கவிதைத் தொகுதி

**செ.சிவபாக்கியம் J.P**

**(வேங்கை)**

**அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு**

**16.07.2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

அமரர் செ.சிவபாக்கியம் (வேங்கை)J.P அவர்களின் மறைவினையொட்டிய நினைவு வெளியீடாக அவரது முப்பத்தோராம் நாள் நிகழ்வில் வெளியிடப்படும் "மூடிமறைக்காதீர்" என்ற இந்த நூல் எமது நாட்டு நல்ல கவிஞர்கள் பலபேரின் கவிதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் ஒரு குறிக்கோளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தில் குறிப்பாக யாழ்குடா நாட்டிலும் அதனை அண்டய பகுதிகளிலும் நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருந்த சாதிக்கொடுமையினையும் அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களையும் உள்ளத்தால் உணர்ந்த கவிஞர்களின் கவித்துவமாக வெளிவந்தவை இத்தொகுப்பிலுள்ள பாடல்கள்.

இவற்றை அடையாளப்படுத்தி எதிர்காலச் சந்ததியினருக்கு அறிந்து கொள்ளுமுகமாக அமரர் அவர்கள் தமது வாழுங்காலத்தில் சமூகக் கொடுமைகளுக்கு முகங்கொடுத்தவர் என்ற வகையிலும் அவர் சார்ந்த காத்திரமான. நிலைகொள்ளக்கூடிய வெளியீடு ஒன்று வெளிவரவேண்டுமென்ற நோக்கத்தினை ஆதாரமாகக் கொண்டு எமது சமூக மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தெணியான் அவர்களின் முயற்சியில் அவரது அறிமுகவுரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் தமிழ் சமூக மக்கள் மத்தியில் ஒரு பதிவாக அமைவதுடன். சமூக ஒடுக்குமுறைக்குச் சாவுமணியடிக்கவும் வழிவகுக்கும் என நம்புகின்றேன். சாதியின் பிரதிபலிப்புக்கள் இன்றைய நிலையில் அதன் வேகமும், தாக்கமும் நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருப்பதனை சம்பவங்களாகக் கூற முடியுமாயினும், இன்று மூடி மறைக்கப்பட்டுள்ளது என்பதனையும் மறுப்பதற்கில்லை. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிஞர்களுக்கு எனது நன்றி உரித்தாகும்.

ராஜ்பவன்,
அல்வாய்.
13.07.2004.

**செ.சதானந்தன்.J.P**
ஓய்வுபெற்ற அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஊழி மறைக்காதீர்!" தொகுப்பு - அதன் நோக்கு

இப்போதெல்லாம் ஒருவர் காலஞ்சென்றுவிட்டால் அவரின் நினைவாக, அவரை என்றும் நினைவு கூரத்தகுந்த வண்ணம் ஒரு நல்ல நூலினை வெளியிட்டு வைக்கும் நடைமுறையொன்று எமது சூழலில் உருவாகிப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறு வெளியிட்டு வைக்கப்பெறும் நூலுக்கும் அந்த நூல்வழி நினைவு கூரப்படும் காலஞ்சென்ற அந்த மனிதனுக்குமிடையே உள்ள கருத்து நிலைப்பொருத்தப்பாடு எதுவென்னும் ஒரு நோக்கு இந்த நூல் வெளியீடுகளில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. அத்தகைய ஒரு நோக்கு, பொருத்தப்பாடு அடிப்படையில் இருக்கவேண்டும் என்பது அவசியமான ஒன்றன்று.

அமரர் செ.சிவபாக்கியம் (வேங்கை) அவர்கள் நினைவாக வெளியிட்டு வைக்கப்பெறும் நூல் அவரது வாழ்வுடன் பொருத்தப்பாடு உடையதாக அடிப்படையில் அமையவேண்டும் என்னும் கருத்தினை நண்பர் செ.சதானந்தன் அவர்கள் கொண்டிருந்தார். எழுத்தாளர் கே.டானியல், தெணியான் ஆகிய இருவரும் சாதியம் பற்றித் தெரிவித்துள்ள கருத்துரைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது ஏற்புடையது எனக் கருதினார். அவ்வாறு செய்வதிலுள்ள இடர்பாட்டை விளக்கி, சமூகக் கொடுமைகளுக்கு எதிராக சமூகநீதி பற்றிப் பேசும் கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தேன்.

எனது சொந்த நூலகத்தில் இருக்கும் கவிதைநூல்களை எடுத்து வைத்துக்கொண்டு கவிதைகளைத் தெரிவு செய்யும் வேலையை விரைவாக ஆரம்பித்தேன். அப்பொழுது எமது மண்ணின் ஆத்மாவை வெளிப்படுத்தும் மண்வாசனை மிகுந்த ஈழத்துக் கவிதைகளை மாத்திரம் தொகுக்கலாமே என்னும் ஓர் உள்ள உணர்வு என்னுள் எழுந்தது. அந்த உணர்வு நிலையில் நின்று கையிற் கிடைத்த கவிதைத் தொகுதிகளை வைத்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகருதி மிக அவசரமாகத் தொகுக்கப் பெற்றதுதான் இந்த "மூடி மறைக்காதீர்" என்னும் சிறிய கவிதைத் தொகுதி.

சமூகக் கொடுமைகளுக்கு எதிராக சமூகநீதிபற்றிப் பேசும் கவிதைகள் என்பன மனித விடுதலைக்கான கவிதைகள்தான். சாதிய ஒடுக்குமுறை, சுரண்டல் கொடுமை, இன ஒடுக்குமுறை, வைதிக ஒடுக்குமுறை, ஆணாதிக்க ஒடுக்குமுறை என்பன மனித விடுதலையைப் பிணித்துள்ள சங்கிலித் தளைகள்.

இந்தத் தளைகளை அறுத்தெறிவதற்கான போராட்டந்தான் மனித விடுதலைப் போராட்டம். மனித விடுதலைப் போராட்டத்தின் போராயுதமாகப் பயன்படுவது இலக்கியம். அத்தகைய மனித விடுதலைப் போராட்ட இலக்கியத்தின் சிறிய ஒரு தொகுப்பு இந்த "மூடி மறைக்காதீர்" என்னும் கவிதை நூல்.

ஐம்பதுகளின் ஆரம்பகாலம் முதல் இன்றைய போர்க்காலச் சூழ்நிலைவரையுள்ள அரைநூற்றாண்டு காலகட்டத்தை உள்ளடக்கியதாக இக்கவிதைத் தொகுதி இன்று வெளியிடப் படுகின்றது. கே.பசுபதி, மு.செல்லையா தொடக்கம் சேரன்வரையும் ஈழத்துக்கவிஞர்களுள் முக்கியமானவர்கள் சிலரது கவிதைகள் இத்தொகுப்பில் ஒரே சமயத்திற் படிக்கக் கிடைக்கின்றது. ஈழத்துக் கவிஞர்களிற் குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்த வேறு சிலரது கவிதைகள் தவிர்க்கவியலாத காரணத்தால் இடம்பெற முடியாது விடுபட்டுப்போயின. இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் கடந்த ஐம்பதாண்டு கால சமூக இயல்பு நிலையினை வெளிப்படுத்துவதுடன், இக்கவிதைகளைப் படைத்திருக்கும் கவிஞர்களின் சமூக நோக்கினையும் இவை வெளிப்படுத்துகின்றன. மனித விடுதலைக்கான போராட்டத்தில் குறிப்பிட்ட இக்கவிஞர்கள் எத்தகைய கருத்து நிலைப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள். வாழ்கின்றார்கள் என்பதை வாசகர்களுக்கு நிச்சயம் இத்தொகுதி உணர்த்திநிற்கும்.

இந்தக் கவிதைத் தொகுதியின் முடியாக கே.பசுபதியும் அடியாக சுபத்திரனும் இடம்பெறுகின்றார்கள். ஏனைய கவிஞர்களின்கவிதைகள் யாவும் காலஅடிப்படையில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டு காலசமூக மாற்றத்தினை வரைமுறையில் அமைந்துள்ள கவிதைகள் உணர்த்தும் என்று நம்புகின்றேன்.

மனித விடுதலையின் ஓர் அங்கமாக அமையும் சாதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுறைக்கெதிரான போராயுதமாகக் கவிதை இலக்கியத்தைப் பயன்படுத்தியவர்களுள் கே.பசுபதி, சுபத்திரன் ஆகிய இருவரும் மிகமுக்கியமானவர்கள். சுபத்திரன் கவிதைகள் பல இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. கடந்த ஐம்பதாண்டு காலகட்டத்துக்குள்ளே தமிழ்ச் சமூகத்துக்கு மத்தியில் பாரிய மாற்றங்கள் பல நிகழ்ந்துவிட்டன. அந்த மாற்றம் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் நிகழ்ந்துதான் இருக்கின்றது. இது ஒரு பொது நியதி. ஒடுக்கப்பட்ட மக்கள் அறுபதுகளில் முன்னெடுத்த போராட்ட நடவடிக்கைகள் மூலமும் பல பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. ஆனால் மூடிமறைக்கப்படும் சாதியக் கொடுமைகள் பல இன்றும் இந்த மண்ணில் இல்லாது ஒழிந்து போய்விடவில்லை. இந்தத் தொகுதியைப் படிக்கும் ஓர் இளைய தலைமுறையினன் கடந்த கால வரலாற்றினை அறிவதுடன் இன்றைய காலகட்டத்தில் மூடிமறைக்கப்படும் ஒடுக்குமுறைகள் பற்றி உணர்ந்து கொள்வதற்கும் இந்தத் தொகுதி பயனுள்ளதாக அமையுமென நம்புகிறேன்.

"சாதிப் பிரச்சனையைச் சாகடித்த பாம்பென்று
ஓதி முடிக்கும் ஒரு கூட்டம் வாழுகின்ற
சேதிதனைக் கேட்டுச் சிரிக்கின்றேன், அழவில்லை"

எனத் தீர்க்கதரிசனத்துடன் பாடி இருக்கும் பசுபதியின் கவிதைத் தலைப்பினையே இந்தத் தொகுதியின் பொருத்தப்பாடு கருதி இதன் பெயராகவும் தேர்ந்து சூட்டியுள்ளேன். இறுதியாக ஓர் இந்தியக் கவிஞன் மூடிமறைக்கப்பட்டிருக்கும் இன்றைய சாதிய சமூக நிலைமை பற்றி எழுப்பும் வினாவுடன் இந்தத் தொகுப்புரையை நிறைவு செய்கின்றேன.

"ஊருக்குள்ளே சாதியில்லை
ஒப்புக் கொள்ளலாம் - அது
உள்ளத்திலே ஒளிந்திருக்கே
என்ன பண்ணலாம்?"

கலையருவி,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
14.07.2004.

தெணியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*க. பசுபதி*

## சாதிக் கொடுமை

சாதியெனும் கொடுமையினால் தமிழர் கூட்டம்
சஞ்சலத்தில் வீழ்ந்ததடா சகதி யாகி!
ஆதியிலே ஒருசாதி இருந்த தென்பர்
அந்தநெறி இந்நாளில் காண வில்லை!
நீதியிலே பிழைத்தவர்கள் நெடும ரம்போல்
வீழ்ந்தசெய்தி ஓதுகின்றார் நீதியில்லை.
சேதியிது; தமிழ்நாட்டுச் சேதி கேளீர்!
செயலில்லை; செப்புதலே மட்டும் தம்பீ!

தாய் மொழியாம் தமிழ்பயிலத் தடுப்புத் தம்பீ!
தனதுரிமை பேணுதற்கு இரத்தல்; தீரா
நோய்கொண்ட மாந்தருக்கு உணவுச் சாலை
நல்லவர வேற்பளிக்கும்; ஆனால் என்றும்
தீமைதவிர் தொழில்புரிந்து வாழ்நர் தம்மை
தீட்டென்று தடுக்கின்றார் தீய மாக்கள்!
தாய்மகனைச், சகோதனை அடிமை கொண்ட
சேதியிது: தமிழ்நாட்டுச் சேதி கேளீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*க. பசுபதி*

## மூடி மறைக்காதீர்!

வாழும் மனிதரது வாழ்வை வளம்படுத்த
சூழும் முறைக்கேற்பச் சொல்லிச் செயல்படுத்தல்
நாலும் தெரிந்தவரின் நற்பணி என்பதனை
நாளும் நினைவூட்ட வேண்டுவ தோதமிழா?

உள்ளதை உள்ளபடி உற்று உணர்வோடு
தெள்ளத் தெளிவாகத் தேர்ந்து உரைத்தாலோ
பொல்லாத கோபம் "பொடுக்" கென்று வந்திடுமோ?
நல்லதோ இச்செய்கை நாட்டை வளம்படுத்த?
மூடிம றைப்பதனால் முன்னேற்றங் காணாதே!
வாடி வளங்குன்றும் வாழ்வும் பறிபோகும்;
பாடிப் பலனுமில்லை: பல்கலையும் பாழாமே!
நாடும் நலிவடையும்; நல்லினமும் வீழாதோ?

சாதிப் பிரச்சினையைச் சாகடித்த பாம்பென்று
ஓதி முடிக்கும் ஒருகூட்டம் வாழுகின்ற
சேதிதனைக் கேட்டுச் சிரிக்கின்றேன்; அழவில்லை!
பாதி துகிலுரிந்த பாவைதனைப் பார்த்து;
போதும் உனக்கிந்தப் போர்வை நிலையென்று
நீதிதனை ஓதும் நீசரிவர்; வாழுகின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர இனமென்று வீராப்புப் பேசுங்கால்
சாரம் தனைவிடுத்துச் சச்சரவுக் காளானீர்!
சீரான வாழ்வு செப்பனிட வேண்டிப் பின்
நேரான நல்வழிகள் நேர்மை இவைக்கண்ணே,
மேன்மக்கள் என்று மிகுந்து பணிந்துரைத்து,
ஆன்மீகம் பேசி, அறமுரைத்து, ஆனவழி
பேசி முடித்தும் பேறென்ன கண்டீரோ?
ஆசி மொழிகூறி ஆதரவு தந்தீரோ?

சேரிதனிற் தீயிட்டு தீப்பிழம்புக் காடாக்கி,
ஏரிதனில் நஞ்சிட்டு, எஞ்சும் கிணறுகளில்
கொட்டி மலமள்ளிக் கொண்டு தணியாமல்,
திட்டி வசைமாரி தீரா துடல்தன்னைத்
தட்டிப் பதம்பார்த்து தலைகால் தெரியாமல்
விட்டெறியும் சேதி விரவி யிருப்பதனை
மூடி மறைக்காதீர்! முன்னேற்றம் காணாது!
பேடித் தனமாகும் பீத்தற் பெருமைக்கண்
ஓடி ஒளிந்திருக்கும் ஏராளம் தீவினைகள்
தேடித் திரிவானேன் தேசத்தின் எல்லைக்குள்?

சாதி வெறியர்கள் சச்சரவுக் குள்ளாக்கி
நீதி தனைத்தேடி நீதிநிலை சென்றாலும்
மோதி உடைத்தெறியும் மோட்டு அதிகாரி,
மேதிக் குணம்படைத்த மாநகர்க் காவலர்கள்,
நாட்டின் பழமையினை நாட்டி நிலைநிறுத்த
சேட்டை பலபுரிந்து சீரழிக்கும் தன்மையினை
கேட்டதிலை யோவிந்தைக் கிள்ளைமொழிக் கவிவாணர்?
பாட்டதிற் பாடினால் பாவம் பிடித்திடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாத துயரத்தால் மாறி மதஞ்சேரும்
நூறான பேர்களைத்தான் நோக்க மனமற்றீர்!
பாராமல் இந்தநிலை பார்க்க மறுத்தீரோ?
ஆரோ இவர்என்று அசட்டைதான் செய்தீரோ?
பட்டினத்தை விட்டுப் பழமை நிறைந்தவொரு
பட்டிதொட்டி பார்த்தால் பரந்த அள வினதாய்
சட்ட வரம்புடைய சாதி முறையங்கு
கொட்ட மடிப்பதனைக் கொள்ளும் மரபாக்கி
விட்டிருக்கும் நந்தமிழர் வீட்டு விறாந்தையினில்
கிட்ட நெருங்காமல் கீழ்சாதி என்றுரைக்கும்!
ஆண்டவன் சந்நிதியில் அண்டி வணங்கிடவும்
வேண்டாத மேதை விரும்பாத பேதையரும்,
தேநீர்க் கடைதன்னில் திவ்விய நாகரிகம்
பேணி கறள்கட்ட, போத்தலும் ஊதுகுழல்
ஆனநிலை இன்னும் எங்கும் இருப்பதனை
ஏன்பார்க்க எண்ணம் இசையாதோ உம்மனது?
மாண்டு மடிந்த பினும் மாற்றம் விரும்பாது.
தோண்டும் இடுகாடும், தூய்மைப் படுத்தும்
சுடுகாடும் சாதியினைச் சுட்டித்தான் கண்டோமோ?
வான்பார்த்த பூமி வளமாக்கித் தந்தவரும்
கான்பார்த்த சாக்கடையில் சாகத் துடிப்பதுவோ?

நீர்தமிழை விட்டு நிலைபிரிந்த காலத்தும்
சீருடை தானணிந்து சீமை மொழிபேசி,
ஆரோ கணித்துநீ ராங்கிலேய ராயிருந்து
பேரான வாழ்க்கை பெரிதுவந்த நாளதிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்பேசி வாழ்ந்திருந்தோம் நம்தமிழ்த் தாய்மொழியை!
ஆம்! இதனை அட்டியின்றி ஏற்பீரோ இந்நாளில்?
தீந்தமிழைப் பேசித் தேவை வரைகாத்த
இந்தத் தமிழருக்கா இத்தொல்லை செய்கின்றீர்?

தோழர்கள் என்றாலோ தோளொடுங்கி ஓடுகின்ற
காளான்கள் காலம் கரைந்து ஒழியாதோ?
மீளா மிடிமையால் மேலும் உயராமல்
வாழ்விக்க வைக்கும் வறுமையின் தத்துவத்தைப்
பூசி மெழுகிப்புதுமெருகுக் கூட்டென்று
பேசி உளறும் பெரும்பிணிதான் மாளாதோ?
தேசியம் பேசினால் தீட்டென் றதைத் தொடவும்
கூசிநடுங்கும் கூட்டம் இதற்கெல் லாம்
பாசி பிடித்ததுவோ! பாழும் நிலைமறந்து
காசிக்குப் போவாரோ காசினியி லிருப்பாரோ?
நேசமனப் பான்மை நீடு செறிந்திருந்தால்
தேசம் சிறக்காதோ? செல்வநிலை சேராதோ?
வாழும் இலங்கையை வாய்த்ததாய் நாடென்று
நாளும் ஒருமுறையும் நாநவிலல் இல்லாத
பாழும் படித்த பாவலரும் வாழ்கின்றார்!
தோழமை அற்றார்க்குத் தேசியம்தான் தேறிடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் பொருள் வளத்தால் செல்வம் சமனாக்க
சாரும் பொதுவுடமை! சாதிமுறை ஒழியும்!
பேசும் மொழிச்சண்டை பேரற்றுப் போய்விடும்!
கூசும் குறைசேர: கொள்கை நிலைத்துவிடும்!

கூறும் பொருளதனை நாம்கூற மாற்றாக
வேறு பொருளதனை வேண்டுமென் றேயுரைப்பார்!
ஆறு வளம்விரும்பிச் செழிப்பிப்போம் என்பாரே!
சேறு வளம்விரும்பிச் செழிப்பிப்போம் என்பாரே!
நாம்கூறும் நல்லவைகள் நாட்டுக்கு நல்லதெனில்
தாம்கூற வேண்டுவதில் தப்பில்லை! ஆனாலும்
வீம்பென்று சொல்லாதீர்: முன்னெற்றம் காணோமே!
பாடிக் கிறுக்காதீர்: பாதை தவறாதீர்!
வேடிக்கை இல்லை விரும்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மு. செல்லையா*

## தோட்டிகளின் துயரக்குரல்

(சேவையின் பொருட்டல்லாமல் சம்பளத்தின் பொருட்டு மலமகற்றுந் தொழில் (தோட்டித் தொழில்) இருக்கும் வரையில் உண்மையான மனித நாகரிகம் உண்டானதாகக் கொள்ளுதல் சிந்திக்கப்படவேண்டிய தொன்றாகும்)

*எண்சீர் விருத்தம்*

கல்வியெனுங் கண்ணிழந்த படியி னாலே
கடும்பசியாந் தீவருத்துங் கருத்தி னாலே
அல்லல்தரும் மலம்முதலாம் அழுக்கை நீக்கி
அருநரகை நகரமென ஆக்கி வாழ்வோம்
வெல்லுமுயர் மாளிகைவாழ் சுரங்க ளெல்லாம்
மேதினியில் எங்கரத்தில் மேவிற் றன்றோ
பல்விதமாய் நாம்புரியும் நன்றி எண்ணீர்
பகர்கூலிப் பணமுமற்பந் தானே பாரீர்.

அதிகபணந் தந்தாலெம் மைந்தர் கல்வி
ஆய்ந்துகொடு மறியாமை நீக்கி யிந்த
மதியிழந்த கீழ்த்தொழிலைச் செய்ய மாட்டார்
வாழுலகம் நாறுமென மதிக்கின் றீரோ
நிதியுடைய அரசாட்சி நினைவு கொண்டால்
நீண்டபல வழியுண்டு தோட்டி வேண்டாப்
பதிநகர்கள் அமைத்திடலாம் கருணை வேண்டும்
பாவியர்நாம் மனிதரென்ற பரிவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுடனே சிவபெருமான் உலகத் தோரின்
　　　　பீடைதரு மலமகற்றும் பெருந்தொண்டுற்றான்
மண்ணினிலே நாமுந்தத் தொண்டைத் தானே
　　　　மாதருமன் செய்துமல மகற்று கின்றோம்
திண்ணியராய்ச் செயற்கரிய பெரியோர் செய்வர்
　　　　செய்தியிதை வள்ளுவனே தெளியச் சொன்னான்
எண்ணிடுவீர் இத்தொழிலை யாரே செய்வீர்
　　　　இரக்கமெனுங் கதவுதிறந் தெம்மைப் பாரீர்.

தோட்டிகள் வேண்டுகோள்.

　　　　(நாற்சீர் விருத்தம்)
கைக்குக் கையுறை காலுக்குப் பாதுகை
மெய்க்குத் தகும்சட்டை வேண்டிய கம்பளம்
திக்குக் காற்றுகள் சேர்சுக வீடுகள்
தக்கஇ ராக்கல்வி தந்தெமைத் தாங்குவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சில்லையூர் செல்வராசன்*

## கடவுளாக வேண்டும்

கடவுளாக வேண்டும்- நானோர்
கடவுளாக வேண்டும்- சொல்லின்
கடவுளாக வேண்டும்:
உலக மெங்குமுள மனித ரெல்லவரும்
ஊழி காலமெனை உள மிருத்தவே,
தலை சிறந்ததாய், நான், இனித்தசெந்
தமிழிலே கவிதை தான் படைத்திடுங்
கடவுளாக வேண்டும்- படைத்தற்
கடவுளாக வேண்டும்:
நல்லதென் றெனை துள்ளம் உள்ளுகிற
நனிசிறந்த தமிழ் அறமெலாம், உலகில்
வல்ல ஆயுளொடு வாழ, என்கவிதை
வாக்கினால், அவைகள் காக்கு மாற்றலின்
கடவுளாக வேண்டும்- காத்தற்
கடவுளாக வேண்டும்:
எங்கு செந்தமிழர் வாழ் விடர்ப்பிடியில்
இட்டெவர் வரினும், எனது தீயுமிழும்
அங்கதக் கவிதை விழியினால், அவர்கள்
அற்று நீறுபட இற் றழித்திடுங்
கடவுளாக வேண்டும்- அழித்தற்
கடவுளாக வேண்டும்:

கடவுளாக வேண்டும்- நானோர்
கடவுளாக வேண்டும்- சொல்லின்
கடவுளாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீலாவணன்*

## பாய்விரித்து வையுங்கள்

பறையின்மகள் தூங்குகிற
அறைக்கதவை நள்ளிரவில்
பதுங்கிச் சென்று
குறைமதியால் மதுவெறியால்
தட்டுகிற கோமான்காள்
கொஞ்சம் நில்லீர்!
நிறையுடையாள் பொன்றாத
கற்பென்னும் நிதியுடையாள்
நெஞ்சை ஈர்த்தால்
முறையாக மணப்பதிலலே
வசையென்ன? ஏறிடுமோ
முதுகில் மேளம்!

முடிச்சவிழ்க்கப் போம்பொழுதும்
முதலாளி போலுடலை
முறையாய் மூடி
நடித்துலகை ஏய்ப்பதற்கும்
நாகரிக உடைவேண்டும்!
அவற்றைக் கல்லில்
அடித்தும்மை அழகுசெய்யும்
அந்த"வண்ணத்" தோழனுங்கள்
அருகில் வந்தால்
துடிக்கின்றீர் ஏனையா?
சொல்லுங்கள் தொங்கிடுமா
தோளில் மூட்டை!

குரங்குக்கும் உங்களுக்கும்
கொஞ்சமென்னும் உறவில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துக் காட்ட
சிரங்கொட்டும் நும்தலையில்
சீழ்கொட்டும் போதுமதைச்
சிங்கா ரிக்க
கரந்தொட்டே கத்தியினால்
"கருக்" கென்று மயிர்சீவிக்
காட்டு வாழ்வுக்(கு)
இரங்குகின்ற "அம்" பட்டன்
ஈனனென்று செப்புகிறீர்
இதுவோ நீதி?

களிப்புக்கும் உள்ளாழ்ந்த
கவலைக்கும் மருந்தென்று
கலத்தை நீட்டி
புளிப்புக்கும் இனிப்புக்கும்
போராட்டம் போடுகிறீர்
பொழுது பட்டால்!
சுளிக்கின்றீர் ஏதேதோ
சுடுசொற்கள் வீசுகிறீர்
சொந்த நண்பன்
குளிக்கவரின் பொதுக்கிணற்றில்
"பள்"ளென்று கூவுவதோ
கொடுமை ராசா!

கோயிலையும் ஹோட்டலையும்
"கொள்கையெனப் பேசிடுவோர்
கூடிச் சென்று
வாயிலினைத் திறப்பதினால்
வந்திடுமோ ஒன்றுகுலம்?
வளர்ந்து விட்ட
நோயிதனை நொருக்கிவிட
நோக்குடையீர் எனிலுங்கள்
நொண்டி நெஞ்சில்
பாய்விரித்து வையுங்கள்
பகுத்தறிவு நல்லெண்ணம்
படுத்துத் தூங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீலாவணன்*

## கூத்து!

கூத்தாடிகளே, விரைவா யாடுங்கள்
கூதல் போகக் குதித்து- வேர்த்துக்-
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

பார்த்த மக்கள் நீத்துப் போகார்!
பனியில், பட்டு மணலில்- நிலவில்
ராத்திரி முழுதும் கூத்துப் பார்க்கும்
ரசிகர் இவர்கள் பெருமைப் படவே
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

கட்டியக் காரன் பட்டயம் முடிக்க
எட்டிடத் தாளக் கட்டொடு, பாட்டும்,
முட்டி மோதிப் பெரும் அட்ட காசத்தொடும்
முக்கிய நாயகன் கொலுவொடு தோன்றிக்
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

பாங்கியும் பட்டத் தரசியும் தோன்றி,
ஆங்கொரு சோலை அடைவதும், அரசர்,
மாங்கனிச் சுவையில் மயங்கி மல் லாந்து,
பாங்கியர் தயவால் பாவையைப் புணர்ந்தும்
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

கூத்தாடி கள்நீர் குடிப்ப தற்காகக்
குடங்கள் அந்தக் கொட்டகைப் பின்னால்
பார்த்திடும் ரசிகரும் அதிலே அள்ளிப்
பருகத் தராதீர்! குறை கிறை யில்லைக்....
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் புலரப் போகுது பாரீர்!
புலர்ந்தால்..... ஜிகினாப் பொட்டுகள் அந்தோ!
வெளுக்கப் போகுது சாயம்! கண்டால்.....
விரையப் போகுது சனங்கள் வீடு!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

இருட்டு முடியும் முன்னே, கூத்தை
எப்படி யேனும் நடத்திப் போடுக!
மருட்டு வேஷம் குலைந்து போனால்
மக்கள் கூட்டம் கலைந்து போகும்!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

போக்கிரித் தம்பான் தருமனுக் கென்றும்
பொண்டுக் கணபதி அருச்சுனன் என்றும்
மோக்கான் தவளையன் திரௌபதி யென்றும்
முழுவதும் காரிய பாகங்கள் விள்ங்கும்!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!

விடிந்தால்... வேஷம் கலைந்தால் - எங்கள்
வெட்டிய ஒட்டிய வேலைகள் மழுங்கும்!
படிந்த பகலில், பக்கத் துற்றுப்
பார்த்தால்... நுங்கள் கலைமணம் நோகும்!

கூத்தாடிகளே! விரைவாக யாடுங்கள்!
குதித்துச் சதங்கைத் திமித்துத் தா! தெய்
குலுங்கக் குலுங்கக் குலுங்கச் சிலம்பிக்
கூத்தாடிகளே! விரைவா யாடுங்கள்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீலாவாணன்*

## அடிசடையா!

அடிபறை அடிபறை அடிசடையா - ஊர்
அரள்க! அரள்கவென! அடிசடையா!

அன்னம்போலத் தலையைமுன்னால் நீட்டு - கையை
அப்படியும் இப்படியும் காட்டு
முன்னும் பின்னும் காலைத் தூக்கி
உன்னி யுன்னித் தாளந் தீர்த்து

அடிபறை அடிபறை அடிசடையா! - ஒரு
அவசர மிலையினி அடிசடையா!

பாடை கட்டி முடியவில்லை ஆடு! - சனம்
பார்த்து நல்லாய் ரசிக்கட்டுமே ஆடு!
வாடைக் காற்றில் உனதுவெள்ளைத்
தாடி போனால் கவலையில்லை!

அடிபறை அடிபறை அடிசடையா! - அயல்
அறிக அறிகவென அடிசடையா.

இறைச்சிக் கடை காரரிவர் சாது - வீசும்
எலும்புக்காகப் பெட்டைநாய்கள் வருது!
பொறுக்க வந்த நாய்க்கெலும்பு
பொறுத்த தற்குயார் பொறுப்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபறை அடிபறை அடிசடையா - இவர்
அறமும் அயலறிய அடிசடையா.

தங்கமென்றால் எங்கள் முதலாளி - தானத்
தருமத் தண்ணீர் நிறைந்து பொங்குங் கேணி
தங்கக் காசின் ஓரமாகத்
தங்கி வாழும் நீதி! தூசு

அடிபறை அடிபறை அடிசடையா! - இனி
அதிசயம் அறிகென அடிசடையா!

சந்திவரும் அதில்சவத்தை நிறுத்து! - இவர்
சாதிகுலம் கோத்திரத்தை மதித்து
குந்திக் கெந்தி ஆடு: கொட்டு!
வந்த நாலூர் காதில் முட்ட

அடிபறை அடிபறை அடிசடையா! - அவர்
அழகிய செயல்களை அடிசடையா!

குப்பை யோடு உண்மையையும் கூட்டி - பாவம்
கொளுத்த வென்றோ போகிறீர்கள் காட்டில்
எப்படிக் கொளுத்துவீர் மெய்
எரிக்க நின்று சிரிக்கும் என்று...

அடிபறை அடிபறை அடிசடையா - ஊர்
அரள்க அரள்கவென அடிசடையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மஹாகவி*

## தேரும் திங்களும்

“ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே:
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை”
என்று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்றமகனே அவனும்.
பெருந்தோளும்
கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன்தான்.

வந்தான். அவன்ஓர் இளைஞன்:
மனிதன்தான்.
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

“ஈண்டுநாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும்” எனும் ஓர் இனிய விருப்போடு,
வந்தான் குனிந்து வணங்கி வடம்பிடிக்க -

“நில்!” என்றான் ஓராள்
“நிறுத்து” என்றாள் மற்றோராள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"கொல்" என்றான் ஓராள்
"கொளுத்து" என்றான் வேறோராள்.

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு,
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு,
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து,
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டது போல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான்பெற்ற
மக்க ளுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்தநாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்,
அதோ மண்ணிற் புரள்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முதல்வனார்*

## குரல்கள்

ஆலையி லேதினம் சாலையி லேபொருள்
ஆக்கிடு வார்வளம் தேக்கிடு வார்
மேலவ ராம் தொழி லாளர் உரி மையின்
வேட்கை கிளப்பிடும் வேகக் குரல்
காதுக்குள் ளேநின் றொலிக்குதடா - என்றான்
கருத்தினை என்னமோ செய்யுதடா!

ஈழத்தி லேவட பாகத்தி லேமன
ஈனத்தி னால்தங்கள் சோத ரரை
வாழத் துடிக்கின்ற மக்களை வேறாக்கி
வாட்டுவ தாலெழும் சோகக் குரல்
காதுக்குள் ளேநின் றொலிக்குதடா - என்றான்
கருத்தினை என்னமோ செய்யுதடா!

மானத்திற் காய்சம வாழ்வினுக் காய்மிகு
மாட்சி தரும்சுக வாழ்வினுக் காய்
கூனிக் குறகிய ஞாலத்து மக்களின்
கூட்டம் முழக்கிடும் கூக்கு ரல்கள்
காதுக்குள் ளேநின் றொலிக்குதடா - என்றன்
கருத்தினை என்னமோ செய்யுதடா!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கருணையோகன்*

## உயர் திரு கந்தசாமியும்
## ஒரு மரண ஊர்வலமும்!

ஒடுங்கியதோர் பாதையிலே ஒரு மரண ஊர்வலம்....
முடிந்துவிட்ட மனிதகதை
முடிவுகளைத் தெரிவித்த
தடல்புடல்க ளேதுமின்றித்
தரையூர்ந்து செல்கிறது
ஒடுங்கியதோர் பாதையிலே ஒரு மரண ஊர்வலம்...

நடைப்பிணமா நேற்றுவரை
நடமாடித்திரிந்த அவன்
படுத்திருந்தான் பாடையிலே
பக்கத்தில் சிலமனிதர்

மேல்சாதி இவனென்றால்
மேளதாளம் பலவிருக்கும்
பாழ்பட்ட தமிழனிவன் கீழ்சாதி மகனென்பார்

கள்ளிறக்கி நேற்றுவரை
காலம்க ழித்த இவன்
உள்ளிருக்கும் உயிர்பிரிய
உறங்குகிறான் பாடையிலே

தடல்புடல்க ளேதுமின்றி
தரையூர்ந்து செல்கிறது
ஒடுங்கியதோர் பாதையிலே ஒருமரண ஊர்வலம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலத்தைத்தொடர்ந்து பின்
ஊரிலுள்ள உயர்மனிதன்
சீர்செம்மல் கந்தசாமி செல்கிறார், அதிசயமாம்!

இறந்துவிட்ட கந்தன்குடில்
இருக்குமிடம் சென்று, கள்
அருந்துவது இவர் வழக்கம்
இதனாலே அந்நன்றி
மறவாத தன்நிலையை மறந்திவரும் சென்றாரோ?

அந்த உறவெண்ணி இவர்
அதன்பின்னே செல்லவில்லை!
சிந்தவில்லை ஓர்துளியும் சிந்தையிலே ஓர் மகிழ்ச்சி

கடன்கூறிக் கள்குடித்த காசெண்பத்தெட்டு, இனி
உடனிருக்கும் இவருடனே,
ஒருவருக்கும் தெரியாதே!

சண்முகத்தின் வீட்டருகே
அண்மித்த ஊர்வலமும்
சந்தி சில கடந்தபின் அந்தவழி பிரிகிறது!

இந்தவழி திரும்புகிறார்!
ஏனோஇவர் திரும்புகிறார்?
கந்தசாமி செல்கின்ற
அந்த வீதி அவரம்மான் சுந்தரத்தா ரிருக்குமிடம்!

சுந்தரரைக் காண்பதற்கே
அந்தஊர்வ லத்தின்பின்
சந்திவரை வந்தாராம்!
"கந்தனிவன் இறந்ததனால்
காசெண்பத் தெட்டு ரூபா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநினை வூடேஇவர் ஏகுகிறார் வீதிவழி!
யாதுமொரு துணையின்றி
வீதிநின்ற பனையொன்றி
காவோலை ஒன்றுக்கும் சாவோலை இன்றாமோ?

வட்டுக்கு ளிருந்துவிடு பட்டதொரு காவோலை
எட்டவரும் கந்தசாமி
கிட்டவரும் போதவரின்
மொட்டைத்தலை மீதினிலே
பட்டென்று விழுந்ததுவாம்!

பாதையிலே கந்தசாமி வாதையினால் அலறுகிறார்!
எட்டநின்று ஓர்மனிதன்
இழிந்தசாதி யாமவனும்
கிட்டஓடி வந்தவரைத் தொட்டுதவி செய்கின்றான்!

ஓ! அந்தச் சிறுவளைவில்
ஊர்வலமும் மறைகிறது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள்
## சருகுகளல்ல!

நகரத்தில்
தொழிற்சாலை கக்குகிற
நச்சுக் காற்றைத்தான்
நாங்கள் குடித்தாலும்
கிராமத்தில்
கால்களிலே சேறும்
கைகளிலே கலப்பையுமாய்
அலைந்து திரிந்தாலும்
நாங்கள்
கச்சான் காற்றுக்கு
ஒதுங்கும் சருகுகளல்ல!
பொதுயுகத்தை நோக்கிப்
போகின்ற பயணத்தில்
இடியோடு மின்னல்
மழையோடு காற்று
பிரளயமாய் எதிர்த்தாலும்
தாக்குப் பிடிப்போம்!
தனியுகத்தைத்
தகர்த்தெறிவோம்!
கிழக்கின் அடிவானில்
கிளர்ந்து சிவக்கின்ற
ஒளியின் ஒருகீற்றுத்
தெரிந்தாலே அதுபோதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாவை நித்தியானந்தன்*

## அழைப்பு

ஏழு ரொட்டிகளை
நாலாயிரம் பேருக்கு
வயிறாரப் பரிமாறிய
யேசு பிதாவே!
ஓர் அவிழ் சோற்றினால்
முனிவர் பரிவாரங்களின்
பசித்துயர் போக்கிய
கண்ண பரமாத்மாவே!
நீங்க ளெல்லாம் இப்பொழுது
வரமாட்டீர்களா?....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேரன்*

*கைதடி 1979*

## கோபுரக் கலசமும்
## பனைமர உச்சியும்

நிர்வாணம் கொண்டு,
தமிழர்கள் அனைவரும்
தெருக்களில் திரிக!

மீண்டும் ஒருதரம்,
ஆதிமனிதனை நெஞ்சில் நினைத்திட
நிர்வாணம் கொண்டு
தமிழர்கள் அனைவரும்
தெருக்களில் திரிக!

கவனியுங்கள்........
நேற்றுமாலை என்ன நடந்தது?
கைதடிக் கிராமத் தெருக்கள்முழுவதும்
மனித விழுமியம், நாகரீகங்கள்
காற்றில் பறந்தன......
வரம்பு நிறைய இலைகள் பரப்பிய
மிளகாய்ச் செடிகள் கொலையுண்டழிந்தன!
தமிழர்களது மான நரம்புகள்
மீண்டும் ஒருதரம் மின்னலால் அதிர்ந்தும்,
பாதிப்பற்று வெறுமனே இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனியுங்கள்.......
பனைமர உச்சியும் கோபுரக் கலசமும்
உயரவே உள்ளன........
அரசியல் பிழைப்பில் ஆழ்ந்து போயிருக்கும்
அனைவரும் உணர்க........
உங்கள் முதுகுநாண் கலங்கள் மீதும்
சாதிப் பிரிவினைப் பூஞ்சன வலைகள்.........!

கங்கை கொண்டு,
கடாரம் வென்று
இமய உச்சியில் விற்கொடி பொறித்துத்
தலைநிமிர்வுற்ற தமிழர் ஆளுமை
குனிந்த தலையுடன், அம்மணமாகத்
தெருக்களில் திரிக.....

ஆலயக் கதவுகள்
எவருக்காவது மூடுமேயானால்,
கோபுரக் கலசங்கள்
சிதறி நொருங்குக.........!

மானுட ஆண்மையின்
நெற்றிக் கண்ணே
இமைதிற! இமைதிற!

கவனியுங்கள்:
அனைவரும் ஒன்றாய்............
பனைமர உச்சியும்
கோபுரக் கலசமும் உயரே உள்ளன.
உயரவே உள்ளன!

யாழ்ப்பாணத்தின் சராசரி இதயமே,
உனது உலகம் மிகவும் சிறியது.
கிடுகு வேலி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலியில் கிளுவை:
எப்போதாவது வேலியின் மீது
அழகாய்ப் பூக்கும்
சிவப்பு முள் முருக்கு.

யாழ்ப்பாணத்துச் சராசரி இதயமே,
ஆயிரம் ஆயிரம் கோவில் கதவுகள்
உன்னை உள்ளே இழுத்து மூடின.
மன்மதன் உடல்களாய்
அவைகள் எரியும்......
அதுவரை,

நிர்வாணமாக,
உயர்த்திய கையுடன்
தெருவில் திரிக,
தமிழர்கள்!
ஓ! இந்தத்
தமிழர்கள்......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வ. ஐ. ச. ஜெயபாலன்*

## எங்கள் கிராமத்துப் பட்டதாரி

ஆதம் காக்கா அண்ணன் செல்கிறார்.
எங்கள் கிராமத்துப் புல்வெளிகளிலே
பாரமிழுக்காத எருதுகளோடு
பால் தராத பசுக்களும் கொழுத்ததால்
இறைச்சிக்கடைக்கு ஓட்டிச் செல்ல
ஆதம் காக்கா அண்ணன் செல்கிறார்.

முட்டை காவும் சிவப்பெறும்புகளாய்
தண்ணீர்க் குடத்துடன் தங்கச்சிப் பெண்கள்,
காற்றில் வைத்த கற்பூரம் போல
இளமை நலத்தை வியர்வை கரைக்கும்,

காசுக்குத் தாலியும் பதவிக்குக் கழுத்தும்
கடன் வழிக்குக் குடும்பமும் நடத்தும்
யாழ்ப்பாணத்துச் சராசரி வாழ்வை
ஒருமுறை நாங்கள் அலசிப் பார்த்தோம்.

முதல் மழைக்கே இளந்தளிர் பெய்த
ஆலமரத்தின் வேர்களில் குந்தி
சேறு காய்ந்த மண்வெட்டிகளை
கள்ளித் தடிகளால் துலக்கிய படிக்கு,

கலட்டுமண் கொத்திய களைப்புத் தீர
ஊரின் புதினங்கள்
பார்த்தோம் கதைத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர யாரோ
கறுப்பு வெள்ளைக் காரனைப் போல.
எங்கள் ஏழை மக்களின் கோழிகள்
பகலில் திருடும் அதிகாரியா அவன்?
நீதிகேட்பதை பயங்கர வாதம்
என்று கருதும் பொலீஸ் வீரனா?

உழைத்துத்தீரா எம் வறுமையைப் போக்க
வாக்குறுதிகளை நியாய விலைக்கு
விற்றுப் பிழைக்கும் அரசியல் வாதியா?
"அட இவன் நம்மவன் கந்தையாமகன்
எங்கள் பல்கலைக் கழகத் தம்பி....."
"இவனால் எங்கள் கிராமம் நிமிரும்......."
"வாங்க தம்பி இருங்க தம்பி........."
பெரிய வேராய்த் தம்பிக்கு விட்டு
நாங்கள் சற்றுத் தள்ளி அமர்வோம்.

தம்பியின் சிரிப்பில் திமிர் இருந்தது.
தம்பியின் கண்ணில் அலட்சியம் தெரிந்தது.
எங்கள் மத்தியில் பிரமுகர் தோன்றி
இருள் விடியும் என்னும் பேச்சுக்கள்
வானவில்லும் கானல் நீரும்
என்னுமாப் போல் தம்பி நடந்தார்.
தம்பியின் கால்கள் பின்னின பசியில்
தம்பியின் கொம்புகள் மின்னின வானில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. வில்வரத்தினம்

# வெறுங் காற்றில் கலந்திடுமா...

முன்பு தமிழ்நாட்டில் ஒரு கீழவெண்மணி
இன்று பீகாரில் இன்னொன்று.

சாதி வெறிக்குத் திக்கேது?
தெற்கிலே பற்றியது வடக்கிலும் தோற்றிற்று.
பீகாரின் ஒருகிராமத்தில்
உழைப்பாளிகள் குரலுக்கு, சாதிவெறியர்
எரிகொள்ளிகளால் பதிலிறுத்துள்ளார்.

கோயிலில் தீவட்டி பிடிக்கிற கைகள்
தாழ்த்தப் பட்டோரின் குடிசைகள் கொளுத்த,
தீவட்டியோடு ஊர்வலம் போயின,
"ஒலிம்பிக் சாதனை"

ஐந்நூறு கொள்ளிவால் பேய்கள்
சுற்றிவர மொய்த்து உமிழ்ந்த தீ
பற்றிப் பிடிக்க ஒரே குடிசைக்குள்
பதிநான்கு உயிர் வெண்மணிகள்-
பிஞ்சுகள் நேற்றுத்தான்
மஞ்சம் நுகர்ந்தவர், முதியவர்-
ஒன்றாய்
பச்சை உடம்போடு பஸ்மீகரமாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிஜனங்களை அவிர்ப் பொருளாக்கி
சாதி வெறியர் வேள்விகள் செய்து
நீறுபூச
சந்நிதானங்கள், பீடங்கள், கோயில்கள்
குத்துக்கல்லாய், குந்தியிருந்து ஸ்லோகம் சொரிந்தன
ஆட்சிபீடங்கள் வந்தன போயின.

கீழ வெண்மணிகள் போயாவிட்டன?
சாதிப் பேய்களிள் ஏவலால்
மன்னுயிர் தின்ற தீயே
நீயும்
விண்ணெழுந்து வெறுமனே போகுதியோ?

தீயே!
ஆதி வேடன் பண்டொருநாள்
கல்லோடு கல்லுரசக் கனன்ற தீயே!
உன்னை மீண்டும் அழைக்கிறோம்
ஒன்று கேட்போம்.

ஆயிர ஆயிரம் ஆண்டுகளாகச்
சாதிவெறியை ஊதிவளர்த்த
தீயவர் கையில் நீ சேரற்க
அக்கினியே.

இடம் மாறு.
அஞ்சி ஒடுங்கி அடங்கி வாழும் இந்த
ஏழை மனிதரிடங் குடியேறு.
அவர்கள் கண்களில் ஜுவாலி
நெஞ்சங்களில் ஞான நெருப்பாய் எரி
சொற்களில் நின்று சுடுசரமாகு
செயல்களில் செங்கதிராகு
மெய் நெருப்பாக மேதினி எங்கும் திரிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிஜோதியே: அனற் கொழுந்தே
நின்னை மண்டியிட்டோம்: இந்த
எளியவர் வாழ்வு வெளிச்சம் பெறும் பொருட்டாக
தீயே நின்னை அழைத்தனம்
தீயரை விரைவில் சென்று தீண்டுவதற்காக.

ஜாதி, இன, மத, நிறவெறி
எந்தெந்த மூலை முடக்கிலே காணினும்
அவற்றை நீக்கமற எரித்து
நீறாக்கும் பொருட்டாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முருகையன்*

## வேலியும் காவலும்

வேலிக்குப் பயிர்கள் மேலே
விருப்பமே இல்லைப் போலும்!
 - சோலிக்கு முடிவு காண்பம்!
சுடுவம், என்று எழும்பிச் சென்று
தீ வைத்து முடித்த வேலி
திருப்தியை அடைந்திருக்கும் -
கோபத்தைத் தீர்த்திருக்கும்.

குவிந்ததோ - பயிரின் சாம்பல்!

2.
தோட்டமுங் கொஞ்சம் செழிப்பு!
பயிர்பச்சை
நீட்டமாய் நீண்டு நெருங்கி மதாளித்துச்
சேட்டமாய் நிற்கிறது.
செந்தளிப்பாய்
கரய் கனிகள், பூக்கள் குலுங்கும்
புளுகமுள்ள கொப்புகழளக்
காட்டி நிற்கும் கண்குளிர.
இன்பச் சிறு செடிகள்.

கற்கள் மலிந்த கலட்டித் தரையிலே
புற்கள் படர்ந்து புளுண்டுவது தான்
இந்தக்காணி நிலத்தின் இயற்கை.
அதைமாற்ற என்று
தீர்மானஞ்செய்த
செயற் - கை வலிமையினால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்டிக்கிளறி,
கிணறிறைத்து நீர்பருகிக்
கொண்டிருக்கும் செய்கை
கொடுத்த பலன்களினால்
தோட்டமும் கொஞ்சம்
செழிப்பு, மதாளிப்பு!

நீர் இறைப்புத் தீண்டாமல் நிற்கின்ற
புல்நுனிகள்
காய்த்துச்சருகாகி கருகியிருந்தாலும்
பூச்சியரித்து விட்ட
பூசனியின் சாம்பல் இலை
ஓட்டைப்பிடித்து துவண்டு கிடந்தாலும்,
நோய்பிடத்த கத்தரியில்
நூறிலையில் தொண்ணூறு
கும்பிக் குனிந்தபடி தொய்ந்து கிடந்தாலும்,
அங்கங்கே நல்ல அழகான பச்சை உண்டு.
கண்குளிர -
இன்பச்சிறுகொடிகள் -
தோட்டம் எங்கும்!
தோட்டமோ கொஞ்சம் செழிப்பு -
மதாளிப்பு!

3.
சுற்றி நின்ற வேலி
சுருக்கென்று சீறிற்றாம்.
நட்ட நடு இரவில் -
நாலுபேர் காணாத
கன்னங்கரி இருட்டில் -
காற்சட்டை போடாமல்,
தோட்டத்துள் வேலி
நுழையத் தொடங்கியதாம்.
வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரை எல்லாம்
மேய என்று போயிற்றாம்.
மேயத் தொடங்கி
விறுக்கென்று சப்பிற்றாம்.
மென்று மென்று தின்றதாம்.
மேல் இருந்த கொப்புகளை
வாரி இழுத்து
வளைத்து, முறித்தெறிந்து,
வேரோடு வாங்கிப் பிடுங்கி மிதித்ததாம்.
ஓங்கி உதைத்துத்
துவைத்துப் பொடியாக்கித்
தீங்கு படுத்திச்
சிதைத்ததாம் தோட்டத்தை.
பற்றாத பச்சைப்
பயிர்கள் என்றும் பாராமல்,
பெற்றோலை ஊற்றி
நெருப்பும் கொளுத்திற்றாம்.
வேலி கடித்து
மிதித்த பயிர்க் குப்பைகளும்
வெந்து பொசுங்கி புகைத்து கரியாகி
நொந்து சுருண்டு -
வெறும் சாம்பலாய்ப் போயினவாம்,

4.

வேலை நிறுத்தமொன்றை
வேலை அற்ற சண்டியர்கள்
ஏவற் பேய் ஆகி
இழுத்து விழுத்துதல் போல்
வேலி பயிரை எல்லாம்
மேய்த்துவிட்டுப் போயிற்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிப்பயல்கள்
கடையை உடைப்பதுபோல்
வேலி பயிரை எல்லாம்
மேய்ந்துவிட்டுப் போயிற்றோ?

காடையர் நூலகத்திற்
கைவரிசை காட்டுதல் போல்
வேலி பயிரை எல்லாம்
மேய்ந்துவிட்டுப் போயிற்றோ?

கொன்று
தெருவிற் பிணங்கள் எறிவது போல்
வேலி பயிரை எல்லாம்
மேய்ந்துவிட்டுப் போயிற்றோ?

5.
வேலிக்குப் பயிர்கள் மேலே
வெறுப்புத்தான் இருக்கும் என்றால் -
வேலி ஏன்? காவல் ஏனோ?
காவலோ வேலியாலே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புதுவை இரத்தினதுரை*

## சுதந்திரம் வேண்டும்

பேச என்வாயில் பூட்டுளதிப்போ
எழுத என்கையில் விலங்குளதிப்போ
சிந்தனை செய்ய
யாதொரு தடையும்
இல்லாதிருப்பது என்னவோ உண்மை
சிந்தனை செய்து தெளிந்ததைச் சொல்ல
வாயிலே பூட்டு,
கையிலே விலங்கு:
இப்படியான இழிநிலை தன்னில்
சிந்தனை, ஆய்வு மானிடர் உரிமை.
இரண்டுமே இல்லா....... நாட்டிலே வாழுதல்
இறப்பதும்
இருப்பதும்
சமத்துவம் ஆகும்.
பேச என்வாயில் பூட்டுளதிப்போ
எழுத என்கையில் விலங்குளதிப்போ

விடுதலை என்பது......
விலங்கினை உடைத்தல்
விடுதலை என்பது.......
சிறகினை விரித்தல்
பூட்டுக்கள் உடைத்து, புதியதோர் விலங்கை
மாட்டுதல் அல்லவே சுதந்திரமென்பது!

மண்ணிலே பிறந்த மறுகணப் பொழுதே
பின்னிய வலையைப் பொசுக்கிட எழுந்தோம்
பொசுக்கி - எழுந்த போதிலும்
எங்களின் பூரண விடுதலை தூரவே உளது:

இன்னதை எழுது
இதைவிடு என்று
எங்களுக் கெவர்தான் கட்டளை இடுவார்?
கட்டளையென்பது ஆதிக்க உணர்வு
கலைஞனை மிதித்தால் வேரோடு அழிவு
பேசிடச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்க,
ஊர்வலம் போக,
பேப்பரில் எழுதிடச் சுதந்திரம் வேண்டும்,
சுதந்திரம் வேண்டும்! சுதந்திரம் வேண்டும்!
தெளிந்ததைக் கூறிடச் சுதந்திரம் வேண்டும்
இனப்பகை மூண்டு
எரிகிற நாட்டில்......
ஏழ்மையின் வயிறு
கொதிப்புறு நாட்டில்.......
தூங்கிடும் கலைஞனைத் தூக்கிலும் இடலாம்,
துணைஜவிலா இந்தக் கோழையைச் சுடலாம்,
மக்களோ டிணைந்த கலைஞனின் கைகளை
மறுப்பவ ரெல்லாம் மக்களின் எதிரி.

எதிரிகள் உண்டு! எதிரிகள் உண்டு!
எமக்குள்ளும் இப்போ துரோகிகள் உண்டு
மக்களின் நலனை,
விடுதலைப் போரை,
மறுப்பவ ரெல்லாம் மக்களின் எதிரி.

மாபெரும் வேள்வித் தீயினில்
சூழ்ந்த
மாசுகள் எரிந்து புனிதங்கள் சேரும்
அக்கினி ஆற்றிலி நீந்திடும் மனிதம்
அழிவன போக
அழகுடன் மலரும்
எழு, என இன்று பாடிடும் கலைஞனின்
இளையதோர் பரம்பரை முடிவுரை எழுதும்
முடிவுரை எழதிடும் கலைஞனின் பரம்பரை
புதியதோர் உலகதின்
முகவுரை எழுதும்
ஆதலால் இன்று சுதந்திரம் வேண்டும்
அடிஅடியாகத் தொடருதல் வேண்டும்
மக்களுக்காகவே விடுதலை யுத்தம்
விடுதலை யென்பது மக்களுக்காகவே

பேச என்வாயில் பூட்டுளதிப்போ
எழுத என் கையில் விலங்குளதிப்போ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சோ. பத்மநாதன்***

## இன்று புதிதாய் உலகை நிர்மாணிப்போம்

சாதி பற்றிய கதைகள் எழுதினோம்
சந்த தங்கொண்டு கவிதைகள் பாடினோம்
ஈது தோன்றி வளர்ந்ததிப் படியென
ஏறி எத்தனை மேடையிற் கூறினோம்
நீதி யான உலகைப் படைத்தலால்
நித்திரை வரா தென்று முழங்கினோம்
சாதி போக ஏன் இத்தனை தாமதம்
சமத்து வம்வர எத்தனை காலமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோ. பத்மநாதன்*

## பெண்ணாய் எடுத்த பிறவி

நெஞ்சில் ஒருநெருடல் - நேரம் கழிந்ததென்று
கொஞ்சம் விரைவாய் மிதித்து,
அந்தக் குச்சொழுங்கை தாண்டி
தவராசா வீட்டு முடக்காலை
நீண்டு கிடக்கும் வடலி வளைவோரம்

பளீரென இருசோடிக் கண்கள்!
பார்த்தேன் அவையிரண்டும் பெண்கள்!

காலைப்பனியில் கழுவி எடுத்தந்த
மூலையிலே காட்சிக்கு முன்னிறுத்தி விட்டதுபோல்
பளீரென இருசோடிக் கண்கள்!
பார்த்தேன் அவையிரண்டும் பெண்கள்!

இந்தக் குளிரை, வெயிலை, எழும்பசியை
இந்த இளசுகள் தாம் எவ்வாறு தாங்குவதாம்?
காது செவிடுபடச் செல்கின்ற கார் லொறிகள்
மோத உயிர்பிரிய நேரின்?

இவற்றுக்கு
என்ன எதிர்காலம்? எத்தனை நாள் வாழ்வு?
வலை பின்னும் மனம்.....
எனது சைக்கிள் உருள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமற்ற நிலைமையிலும்
அந்த நாய்க் குட்டிகளின் கண்ணில்
குடியிருந்த நம்பிக்கை
நெஞ்சைப் பிழியும்
நினைவில்
இருசோடிக் கண்கள் வரும்.
அவை,அக் காலைப் பொழுதில், எனைக்
கெஞ்சி உரைத்த மொழி கேளாது வந்தேனே
பிஞ்சுகளின் நம்பிக்கை பிய்த்தெறிந்து விட்டேனே.

தாயை, உடன்பிறந்த தம்பியதைத் தாம்பிரித்த
தீய மனித இனத்தின் சிறுமையினைச்
சொல்லி எனது மனசைத் தொடுவதற்கோ
புல்லின் நுனியிற் பனிபோல நின்றிருந்தீர்?

பெண்ணாய் எடுத்த பிறவிக் கொடுந்துயரை,
கண்ணால் - எழுதாக் கவியாய் - உரைப்பதற்கோ
நின்றீர் எனக்காக - நீண்ட வழிபார்த்து?
நன்றியிலா மானிடன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சி. சிவசேகரம்*

## பல ஆயிரம் வருடம் முன் தொடுத்தபாணம்

எய்தவனிருக்க அம்பை நோவானேன்
என்கிறீர் ஐயா,
உண்மை தான்
என்றாலும் இவ் அம்பு
எப்போதோ எய்தது.
இதன் முன்பு
எழுமரம் துளைத்த
பாணமெலாம் எம்மூலை நிற்குமோ நீர் சொல்லும்.
என் பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டன் தலை கொய்து
பாட்டிக்குப் பாட்டிக்குப் பாட்டி சிரமறுத்து
பரம்பரைக்குப் பரம்பரையாய்
எல்லார் தலையும் அறுத்தெறிந்த அம்பீது.
அப்பன் தலை பறித்து ஆத்தாள் தலை பறித்து
என் அண்ணன் என் அக்காள் என் தம்பி என் தங்கை
எல்லார்க்கும் குறி வைத்து எகிறி வரும் இவ் அம்பு
என் மீது பாய்கையிலே
எய்தவனைத்தேடி எங்கெங்கே நான் போவேன்?

என் தலையும் என் சுற்றம் எல்லாரது தலையும்
எற்றி எறிந்து இனி வருகும் பரம்பரையும்
இலக்காக்கும் முன்னாலே
இவ் அம்பை நாங்கள் இப்போதே முறித்தெறிவோம்

அதன் பின்பு
அம்பை நாம் நோகோம்
எய்தவனை நாம் நோகோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## செந்தீ

சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா- அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நிதியென் றாடுதடா- தமிழ்
நீதி மறந்தவர் எந்த மதத்தினிற்
சாதி படித்தனரோ- இதை
மோதி யுடைப்பது தானொரு பாதையென்
றோதி எழுந்திடுவாய்

அந்த மனிதனும் இந்த உலகினின்
சொந்த மனிதனடா - அவன்
இந்த உலகினில் வந்து கிடப்பது
நொந்து கிடந்திடவோ - அட
இந்து மதத்தினுக் கிந்த நிலைதனைத்
தந்தது எந்த மறை - அது
வெந்து மடிந்திட உந்தி யெழுந்திடு
செந்தீ எழுந்திடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## நெஞ்சை நிமிர்த்திடுவாய்

பாளையைச் சீவிடும் கையைப் புதுப்பணி
பார்த்துக் கிடக்குதடா- புது
நாளைப் படைத்திடும் நாளில் வரும் பகை
நாய்களைச் சீவிடவே - அரி
வாளைச் சுமந்திடும் தோழர் உமதணி
வந்து நெருங்குகிறார் - அவர்
தோளைப் பல தொழிலாற்றிடும் தோழர்கள்
தொட்டு நெருங்குகிறார்.

கோயிற் கதவுகள் மூடிக் கிடப்பது
கண்டு எழுந்திடுவாய் - மத
வாயிற் கதவினைக் காலப் பெருங்கடல்
வந்து அடிக்குதடா - எழு
பாயிற் கிடந்தது போதும் உனதணிப்
பாசறை வென்று வரும் - மத
நோயிற் பிடித்தது போரில் முறிந்தது
நெஞ்சை நிமிர்த்திடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## எழுந்தனர் வடக்கில்

தமிழ்ப் பெரும் குலத்தில் வந்து
தாழ்ந்தவன் என்றூர் கூறும்
தமிழ் மகன் நளவன் பள்ளன்
துரும்பன் என்றுரைக்கும் சாதித்
தமிழ்ப் பெரும் பிரிவில் ஒன்றாய்த்
தமிழனும் பிறந்தான் ஆஹா
தமஜழ்க்குலப் பெருமை என்னே!
தமிழனோ தமிழனேதான்.

ஆலயக் கதவுக்கப்பால்
ஐயனும் அவனைக் காக்கும்
மேலவக் குலமும் செய்த
மடமையின் பிடியிற் சிக்கி
நாளெலாம் உழைக்கும் தோழன்
நாயினிற் சிறந்தோ னென்றால்
மேலவர் சுகத்திற்காக
மாடென உழைப்பதொன்றே

குடிமையை அடிமை யென்ற
கொள்கையைப் பல நூற்றாண்டாய்
அடிமையாய் ஏற்ற தோழர்
எழுந்தனர் வடக்கிலின்று
பொடிபட எழுந்தோம். ஆம்! ஆம்!
பொங்கினோம்: பலியாடாகிக்
குடிசையிற் கிடந்த காலம்
கழுவினில ஏறிற்றம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கொடி அணியிற் தாழ்ந்த
சனத்தவர் என்றோர் வந்தார்
வெங்கொடுங் கலட்டி யெல்லாம்
வீரமோ வீர மென்று
சங்கொலி கூறச்
சக்தியால் வர்க்க நாதம்
பொங்குவது வா! வா! என்று
பாடையிற் சிறுமை வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## வெல்லாது வீட்டுக்குத் திரும்பானையா!

மரமேறி மரமேறி
மரத்த நெஞ்சம்
மடைமையெனும் மரமேறி
மரத்த நெஞ்சை
வரமேதான் என்றெண்ணி
வாழ்த்தும் கேட்டை
வைத்துள்ளார் நெஞ்சேறி
வதைக்க வேண்டும்
உரமேறி உரமேறி
உருக்குப் பெற்ற
உன் கரமே வட்டேறிப்
பாளை சிவி
மரமூறும் மதமெல்லாம்
கறப்ப தொப்ப
மதத்தூறும் மதமெல்லாம்
கறக்க வேண்டும்
பிறப்பாலே பெருஞ்சாதி
என்று கூறிப்
பேதமையால் சிறுசாதி
ஆகிப் போனார்
திறப்பிட்டுப் பூட்டுகிறார்
கோயி லெல்லாம்
திறவென்றால் திமிரென்று
கூறுகின்றார்
நிறத்தாலே கறுப்பென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரிக்காவில்
நிறபேதம் காட்டுகிற
கொடியோர் போல
பிறப்பாலே இந்து என
இருந்தும் கூட
பெய்கின்றர் பெருந்துன்பம்
ஐயோ! ஐயோ!
பாடையிலே சாதிதனை
ஏற்று என்றால்
பலாத்காரம் பலாத்காரம்
ஆகா தென்று
கூடையிலே வைத்ததனைச்
சுமந்த சென்று

ஊரெல்லாம் இலவசமாய்
வழங்குகின்றாய்
கேடையா நீ செய்யும்
செயல்கள் என்றால்
கெடுக்காதே ஆகமத்தைச்
சைவம் போச்சு
படைத்தவனே படைத்திட்ட
சட்ட திட்டம்
பாழாகப் போவதுவோ
என்றாரையா

ஆரையா இனியுன்னைத்
திருத்தல் கூடும்
ஏனையா ஆண்டனைச்
சிறையில் இட்டாய்
போரையா புறப்பட்டு
விட்டாரையா
பொல்லாமைக் கேன்விலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தாரையா
ஊரையா ரெண்டாச்சுப்
புதுமை பொய்யா
ஊற்றெடுக்கும் உள்ளமெலாம்
ஒன்றிற்றையா
வீரையா புறப்பட்டு
விட்டானையா
வெல்லாது வீட்டுக்குத்
திரும்பானையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## தத்துவம்

வையமெல்லாம் துயரோடி
வரண்டு கிடக்கையிலே
பொய் மொழியாய் தம்மைப்
புதைக்கப் புறப்பட்ட
வல்லவர்கள் இங்கு
வாழ்ந்து சிறப்பாக
வேண்டுங்கால் வந்து
சுரண்டிச் சுரண்டிச்
சுகங்கண்டு கொழுத்ததனால்
வரண்டு சிதைந்த சமுதாயம்
பெற்றெடுத்த சாதிக் குழந்தை
பிறப்பு முதல்
உயிர் குடித்து!
உடலரித்து!
உண்டு!
குழந்தைகளின் பிஞ்சு இரத்தைப்பிழிந்து!
குடித்து!
பெற்றதனால்
பெற்றெடுத்த வர்க்கத்தின்
தடித்த தலைக்குள்ளே
தரம் வைத்துச் சென்றதடா
இன்று
சாதி பலவாகிச்
சாத்திரத்தின் துணையாகிப்
பள்ளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையன்
நளவன் எனச்சொல்லிப்
பாத்திரங்கள் செய்து
அரங்கத்தில் ஏற்றி
ஆடவிட்டுத்
திரையிட்டார்!
அத்திரைக்கு
மதமெ ன்னும் வர்ணம்
மளமளத்துப் பூசி விட்டார்
இதனாலே
மெள்ளச் சுரண்ட
சுரண்டலுக்கு உட்பட்டுக்
காய்ந்து கருகிக்
கனலுண்டு!
காலத்தால்
தேய்ந்து உருகும், தோழர் தொழில்
கூறும் புதுமை
அவர் தொழிலால்
அவனிக் கெடுத்தியம்பும் தத்துவத்தை
ஏன் மறந்தோம்!
கேட்பீர்!

ஊத்தை சுமந்திடும் தோழன் - தினம்
ஊரைக் கழுவிச் சுமந்திடும் தோழன்
சாற்றுகிறானொரு பாடம் - அவன்
சாதி குறைந்தவன் தாழ்ந்தவனென்றே
ஏற்ற மிறக்க மிழந்தான் - அவன்
ஏந்திடும் வாளியில் எத்தனை நீதி
நாற்றமென்பார் சிலரங்கே - ஆம்
நாலு வருணமும் நாறுது அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னை மரத்தினிலேறி - மது
தேடித் திரிந்திடும் மேலவர் வாயில்
இன்பம் சொரிந்திடும் தோழன் - அவன்
இன்றிக்கடவுளர் பூசைகளில்லை
என்று இருந்திடும் போது - அவன்
எப்படி கீழவனாவது சும்மா
நின்று குடித்தது போதும் - இனி
நிந்தனை விட்டு நீ சிந்தனை செய்வாய்.

அழுக்குக் கழுவிடும் தோழன் - இவன்
அவித்து அடித்து அலம்பிடும் தோழன்
முழுமை இவன் தொழில் பேசும் - உலகம்
முழுதும் அவித்து அடித்து அலம்பி
பழுத்த வெயிலிடை யிட்டு - அதைப்
பக்குவமாய் வரஇஸ்திரி இட்டு
வெழுத்த உலகினைச் செய்ய - இவன்
வேலை சிறந்ததோர் தத்துவமம்மா.
வேண்டுமளவுடன் வைத்துச் சில
வேண்டாப் பொருள்களை வெட்டி அழித்து
மீண்டும் வளர்த்திடும் போது - அதை
மீண்டுமரிந்து உலகினை உய்க்கும்
நீண்ட பணிதனைச் செய்ய - முழு
நீதி படைத்தவர் முன் வரும்போது
நாண்டு வளர் மயிர் வெட்டித் - தினம்
நல்ல பணி தரும் கலைஞனும் பாடம்

பொங்கு துயருடம் செய்தி - தரும்
பறைகளடித்து முழங்கிடும் தோழன்
எங்கும் சமத்துவமுண்டு - மரண
மத்தனையு முலகத்தினி லொன்று
தங்கியிருந்திடும் போது - ஏன்
தரங்கள் பிரிக்கிறீர் என்று உரைத்து
இங்கறிவுப் பணி செய்யும் - தொழில்
எத்தனை எத்தனை தத்துவமம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## பாழ்பட்ட சாதிவெறி

“செந்தழிழ ரொற்றுமையிற்
சிறப்புக் காண்போம்
சீறிவரும் சிங்களத்தைச்
சினந்து நிற்போம்
வந்திடுவீர்!” என வையம்
அறியக் கூவி
வந்தவரே! இன்றும்மை
வினவுகின்றோம்!

என்ன மொழி சொன்னீரோ
அதைத்தா னின்று
சொல்லுகிறோ மதற்கென்ன
பதிலைச் சொல்வீர்
என்றறியக் கேட்கவில்லை
எனக்கும் வேண்டும்
எம்மனையிற் சுதந்திரமாய்
வாழும் வாழ்வு!

வெறியூறும் பனைவாழும்
நிலத்தில் வாழும்
வெறியாலே மானிடரை
வகுத்துப் பார்த்துக்
குறிவைத்து வாழுகிறீர்!
கொள்ளுமின்பம்
கொடுக்கின்றோ
மென்பதற்கோ
கீழோ ரென்றீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையரின் கால்தொட்டு
வணங்கி நின்று
விரைவாக அவர் மொழியைப்
படித்துக் கொண்டு
கள்ளர்க்குக் கைகொடுத்த
காலந் தன்னிற்
கவின்தமிழைக் காத்தவரோ
குறைந்தசாதி?

பிரமாவின் பாதத்தாற்
பிறந்தோ ரெல்லாம்
பிறப்பாலே கீழ்சாதி
என்று கூறிப்
பிரசங்கம்செய்கிறீர்
பிறப்புத் தந்த
பிரமாவின் பாதங்கள்
எந்தச் சாதி?

கீழ்சாதி மானிடரை
யீன்ற பாதம்
கேவலத்திற் கேவலமாய்க்
கிடக்கும் பாதம்
மேல்சாதிக் கோயிலுக்குள்
மேன்மை பெற்று
மென்மரலைத் தொட்டளைந்து
கிடக்கலாமோ?

ஆலயத்துள் ஆண்டவனை
அடைக்கும் சக்தி
உண்டென்று எண்ணினையோ
அங்கே சும்மா
சாலந்தான் காட்டுகிறீர்
சாமி யென்றீர்!
சாதியெனும் பேயைத்தான்
வணங்குகின்றீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிபல பகுத்திட்டாய்
சாட்டுக் கன்று
சாமிக்கு நாம்துடக்கு
என்றும் சொன்னாய்
சாதியது பண பேதம்
செய்து போன
சாக்காடு என்பதனை
மறைத்துக் கொண்டாய்

கீழ்சாதி அதற்குள்ளே
கிளைகள் நூறு
கிளைக்குள்ளும் பேதத்தைப்
பணத்தாற் செய்து
ஆள்கின்றாய் வடக்கினிலே
ஆணவத்தை
அடக்குவதற்குச் சப்பாணிப்
போரோ எல்லை?

சட்டத்தாற் சவப்பெட்டி
செய்து வைத்துச்
சாதியென்று சாகுமெனக்
காத்துக் கொண்டு
கொட்டாவி விட்டிருக்கக்
காலஞ் சும்மா
காலடைந்து கிடக்கின்ற
கழுதையாமோ?

நஞ்சூறும் மரத்தினிலும்
கொடியோ ரானீர்
நாகத்தின் மதியினிலும்
நஞ்சா யானீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாது மனச்சாட்சி
கொன்றீ ரையோ!
கிணற்றுக்குள் நஞ்சிட்டுக்
கொடுமை செய்தீர்!

பனையோலைக் குடிசையிலும்
வாழ வேண்டாம்
பாழ்பட்டுப் போஎன்று
பகர்ந்து கொண்டு
வினைவாழும் நெஞ்சத்தீர்
நெருப்பு இட்டீர்
விடிவதற்குள் கருகியது
குஞ்சும் தாயும்!

பசுமரத்து ஆணியெனப்
பாலர் நெஞ்சுள்
பள்பறையன் எனப்பள்ளிப்
பாடத்தோடு
குசுகுசுக்கு மாசிரியர்
கொடுமை யென்று
கொலைக்கத்திற், தலைசாய்ந்து
கிடப்பதம்மா!

நகைச்சுவையாய் நாடகத்தை
நடித்துக் காட்ட
நொண்டியொரு நாவிதனார்
வருவா ரங்கு
பகைச்சுமையை இறக்குதற்குப்
படைத்த சின்னப்
பத்திரத்துள் பெரும்பகையைக்
கொட்டிக் கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மோடு எமக்கென்ன
உறவு என்று
ஒதுங்கிப்போய் வாழ்ந்தாலும்
ஏனோ சும்மா
எம்மொடு தனகுகிறீர்?
உமக்கு என்ன
உயிரள்ளும்
எமன்சொந்த
உறவு ஆமோ?

நீயிட்ட நெருப்பினிலே
தீய்ந்து போன
உயிருக்கு விலையுந்தன்
உயிர்தா னென்று
தீயேந்திப் புறப்படுவார்
தீரர் நாளை
திரள்கின்ற படைக்கன்று
தீனியாவாய்

பணத்தோடு படையோடு
பொலிசா ரோடு
பாராளுமன் றத்தின்
பலத்தினோடு
பிணத்தோடு சட்டத்தின்
காவலோடு
கனவான்கள் காத்துவரும்
கெட்ட சாதி

வீழ்கின்ற நாள்நோக்கி
விரையும் தோழா!
வாழ்கின்ற செங்கொடியின்
வர்க்கத் தோழா!
பாழ்பட்ட சாதிவெறி
பதுங்கும் நெஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையென்று அறிந்திட்டோம்
படைதான் வெல்லும்!

கீழவ ரென்று உரைத்திடும் மேலவர்
கீழவர் வாக்குதனைப் - பெறக்
கீழவர் வீடுகள் ஏறுதல் மட்டுமோ?
கேவலம் கெஞ்சிடுவார் - இது
நாள்வரை யாடிய நாடகம் வேறோரு
நாடக மாகியதோ? - எமை
யாளவந் தாரிடும் தாளம னைத்திலும்
ஆடி நாம் தீர்ப்பதுவோ?

பாரதி பாடிய பாட்டின் வரிகளைப்
பாடித் திரிவதிலோ - மதச்
சாரதி நானெனச் சாற்றும் பெரியவர்
சாத்திரம் கேட்பதிலோ - இடும்
நேரம் களத்தினை நோக்கி விரைந்திடும்
நேரமாய் மாறுதடா - கொடும்
பாரஞ் சுமத்திடு முள்ளஞ் சிவந்திடப்
பயணந் தொடங்குதடா!

நீண்டு கிடந்திடும் முட்புதர்ப் பாதையில்
நெஞ்சம் நடக்குதடா! எமை
யாண்டு கிடந்தவர் மாண்டு கிடந்தவ
ராவது திண்ணமடா! - என
மாண்டு கிடந்தவர் மீண்டு மெழுந்தனர்
மானம் நடக்குதடா! - இனிக்
கூண்டு கிடப்பது கேவல மென்றொரு
கொள்கை பிறந்ததடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## பயணம் தொடங்குதுடா!

கூட்டத்திலே சும்மா பேசிவிடடாற் சாதிக்
கூத்து முடிந்திடுமோ? - தமிழிப்
பாட்டினிலே யதைச் சாடிவிட் டாலுடன்
பட்டு அழிந்திடுமோ? - இந்த
நாட்டினி லேயொரு சட்ட மமைப்பதால்
நன்மை பிறந்திடுமோ? - ஒரு
சாட்டை யெடுத்துப் புறப்படடா இளம்
சக்தி படைத்தவனே!

கோயிலெ னும்பெருங் கோட்டைக் கதவினைக்
காத்துக் கிடப்பவரே! - பெரும்
தீயிற் குளித்து வரும்பணி யேந்திடத்
தீயில் இறங்குகிறோம் - இனி
வாயிற் கதவுகள் மூடிடும் வேலையை
வாழ்வில் மறந்து விடும் - ஒரு
தாயின் வயிற்றில் பிறந்தவர் நாமெனும்
தன்மை வளர்ந்து வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## சிறுமை கொல்ல!

வெறுங்கையாய்க் கிடந்தநாளில்
வேண்டிய மட்டுமெம்மை
நொறுக்கினாய்! நோகவைத்தாய்!
நாவினால் சுட்டுவைத்தாய்!
பொறுமையே பெருமையின்று
நெருப்பெனப் பொங்கிப் பாய்ந்து
நெருங்குது சிறுமைகொல்ல!

உடம்பினிற் சட்டைபோட்டால்
உன்மனம் எரிவதேனோ?
திட்டத்துடன் எழுந்து நின்று
திரண்டது எமதுசேனை!
குடத்தினுள் நுரைத்தகள்ளிற்
குதித்திடும் வெறியைச் சாதிக்
குடத்தினுள் அடைத்துவைத்துக்
குடித்திடும் பேய்காள்! ரெத்தக்

கணக்கினில் வரவு உண்டு
காலத்தால் வட்டியுண்டு!
பிணமாக சமைத்துப் பெற்ற
பிணத்திலும் வரவு உண்டு!
கணத்தினில் கணக்குப் பார்த்துக்
கணக்கினை முடிக்க வேண்டும்
கணக்கிட நேரமில்லை
சுதந்திரத் தீயே பொங்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுபத்திரன்*

## இரத்தக் கடன்

இரத்தக் கடன்மிக உண்டடா - அதை
இல்லையென் பான்இங்கு யாரடா?
இரத்தக் கடன்தனை மீட்பது - என
எண்ணிவிட் டோம் இனிப் பாரடா!

தோழிற் கிடந்திடும் துண்டினை - இனித்
தூக்கித் தலைபணிந் தேகவோ?
காலிற் செருப்பிடல் குற்றமோ? அந்தக்
காலம் மறைந்தது குற்றமோ?


கோயிற் கதவினை மூடினாய் - விளக்
கேற்றா திருளினைக் கூட்டினாய்
நாயெனக் காவல் செலுத்தினாய் - பிண
நாற்றமுன் கொள்கையில் மேலடா!

எம்பியின் வாலிலே நாலுபேர் - அவர்
எச்சில் இலையில் மூணுபேர்
நம்பிக் கிடப்பது தூசுகள் - அவை
நக்கிப் பிழைத்திடும் "கேசுகள்"

இரத்தக் கணக்கினைக் காட்டுவோம் - அது
எப்படி என்றுநீ பாரடா
வரவில் கடித்திடும் வேளையில் - உன்
வாலைப் பிடித்தவன் ஓடுவான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# செ. சிவபாக்கியம் J.P

(வேங்கை)

ஊருக்குள்ளே சாதியில்லை
ஒப்புக்கொள்ளலாம் – அது
உள்ளத்திலே ஒளிந்திருக்கே
என்ன செய்யலாம்?

தோற்று நோய்க்கும்
தொழு நோய்க்கும்
மருந்து கண்டோமே
முற்றிப்போன சாதி நோய்க்கு
மருந்து கண்டோமா? – அதை
முழுவதுமாய் எரித்துச் சாம்பல்
கரைக்க வேண்டாமா?

– கவிஞர் எழில்வேந்தன்

மதுரன் கிரா(f)பிக்ஸ், அல்வாய்.
T.P. 226-3099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org